IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.410/2023

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | NARENDIRABABU |
| FATHER'S NAME | : | MAHALINGAM |
| VILLAGE | : | SERUVANGI |
| OCCUPATION | : | ADVOCATE |
| AGE | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 11th day of August 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் செருவங்கி கிராமத்தில் குடியிருந்து வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா..1 எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 29.04.2022 அன்று நானும், எனது அம்மா காஞ்சனா, எனது சகோதரியும் விட்டில் இருந்தபோது சுமார் இரவு 07.30 மணியளவில் எனது உரை சேர்ந்த நேதாஜி, ராஜ்குமார், பாபு ஆகியோர் எங்கள் வீட்டின் முன்பு நின்று கொண்டு அசிங்கமான வார்தையால் திட்டி கொண்டிருந்ததால் எனது அம்மா வீட்டின் வெளியே சென்று ஏன் எனறு கேட்டதற்கு எனது அம்மாவை பார்த்து தெவிடியா, நீ என்ன பெரிய மயிரா என்று அசிங்கமான திட்டி இரும்பு ராடால் இடுப்பின் மீது அடித்தபோது நான் தடுக்க சென்றபோது என்னையும் நேதாஜி என்பவ் இரும்பு ராடால் என் உடம்பின் மீது அடித்து என்னை தெவிடியா பையா, பொட்ட பையா நீ யார் எங்களை தடுப்பதற்கு என்று அசிங்கமாக திட்டி பாபு என்பவர் கட்டையால் முகம், கை மற்றும் முதுகில் அடித்து எங்கள் வீட்டில் இருந்த சோபாவை அடித்து சேதப்படுத்திய சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்தததும் கையில் வைத்திருந்த இரும்பு ராடு மற்றும் கட்டையை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். பின்னர் அக்கம் பக்கத்தினர் என்னையும், எனது அம்மாவையும் குடீயாத்தம் அரசு மருத்துவமனையில் சிசிக்சசைகாக சேர்த்தனர். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மருத்துவமனைக்கு இரவு சுமார் 08.40 மணிக்கு சென்றோம். எங்களை அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் பக்கத்து வீட்டை சேர்ந்த வடிவேலு மற்றும் பொன்மகள் அழைத்து சென்றனர். மருத்துவரிடம் யார்யார் எதில் அடித்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதற்காக சம்பவம் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், எனது அம்மா சத்தம் கேட்டுதான் பார்த்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சசையில் இருந்தோம் என்றால் சரிதான். மருத்துவமனையில்

இருந்தபோது போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணை செய்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. போலிசார் எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் 30.04.2022 ஆகும். போலிசார் விசாரித்து வாக்குமூலத்தை கையால் எழுதினார்களா அல்லது டைப் செய்தார்களா என்றால் கையால் எழுதினார்கள். அரசு மருத்துவமனையில் விசாரணை செய்ததை தவிர வேறு விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் போலிசார் மீண்டும் விசாரணை செய்தார்கள் என்றால் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று திரும்பிய 2 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்து எத்தனை தாளில் எழுதினார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.